(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு ?

(இ) எப்பொழுது எந்த இடத்தில் ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : (அ) ஆம்.

(ஆ) இதன் மதிப்பீடு ரூ. 38.00 இலட்சம் ஆகும். இது நாளொன்றுக்கு 1 டன் பொட்டாசியம் குளோரைட் உற்பத்தி செய்யும்.

(இ) இந்த தொழிற்சாலை இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள குன்றக்குடியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலைக்கு அடிக்கல் 23-2-1982 அன்று நாட்டப்பட்டது. 1983-84 நிதி ஆண்டு இறுதிக்குள் உற்பத்தி துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(முற்பகல் 10-00)

2. தகவல் கோரல்.

(அ) தென் மாவட்டங்களில் வெள்ளத்தால் சீர்குலைந்த மின்சார விநியோகத்தை சீர் செய்தல்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற 7 ஆம் தேதியன்று பெய்த பெருமழையின் காரணமாக மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் பல உயிர் சேதங்களும், பொருள் சேதங்களும், பயிர்களுக்கும் சேதங்கள் ஏற்பட்டதையும், மக்களுக்கு வழங்கப்பட்ட பல்வேறு உதவிகளைப் பற்றியும் முதலமைச்சர் அவர்கள் 12 ஆம் தேதியன்று வெள்ளை அறிக்கை வைத்து சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் ஹெலிகாப்டரில் போய் பார்த்ததாகச் சொல்லியிருக்கிறார்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது பற்றிய விவாதம் 20 ஆம் தேதியன்று வைக்கப்பட்டிருக்கிறது. அது பற்றி, நீங்கள் பார்த்தது கண்டது போன்ற விளக்கங்கள் எல்லாம் வேண்டாம். அந்த விவாதத்திற்கு முன்னாலே ஏதாவது முக்கியமான பிரச்னை வந்திருந்தால் சொல்லலாம்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் கொடுத்த அந்த அறிக்கைக்குள் நான் போக விரும்பவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிவாரண நடவடிக்கைகள் எடுத்ததைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அந்த வேலைகள் எல்லாம் நடந்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டி பகுதியிலே கடலைக்குண்டு, வருஷநாடு, ஆகிய பகுதிகளிலே—முதலமைச்சர் அவர்கள் பார்க்கமுடியாத நிலையில் ஹெலிகாப்டரில் சென்று பார்த்திருக்கிறார்கள்—நான் 2 நாட்களாக நடந்தே 20 கிலோ மீட்டர் சென்று பார்த்துவிட்டு வந்திருக்கிறேன். அங்கே நிவாரண வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. இன்னொரு பேராபத்து இருக்கிறது. இயற்கையின் சீற்றத்தால் பல்லாயிரக்கணக்கான தென்னை மரங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அது மட்டுமல்ல, பருத்தி விவசாயம் ஆயிரக்கணக்கான ஏக்கரில் பாதிக்கப்பட்டிருக்கின்றது. அந்தப் பகுதியிலே மின்சார இணைப்பை வைத்துத்தான் அவர்கள் விவசாயம் செய்துவருகிறார்கள். மின்சாரக் கம்பங்கள் நொறுக்கப்பட்டிருக்கின்றன. மின்சாரம் இப்போது இல்லை. இன்னும் ஆயிரக்கணக்கான ஏக்கர் பருத்தி இன்னும் நான்கு தினங்களுக்குள் அழிந்துவிடுகிற ஆபத்தான நிலைமை இருக்கிறது. மற்றவர்கள் வேலை செய்கிறார்கள். ஆனால் மின்சாரத் துறையைச் சேர்ந்தவர்கள் அங்கே வேலை செய்யவில்லை. இயற்கையின் சீற்றத்தால் அழிந்தது தவிர இப்போது இருக்கிற பயிர்களும்கூட அழியும் ஆபத்து இருக்கிறது. ஆகவே உடனடியாக தனியாக மின்சாரத் துறையினரை அங்கே அனுப்பி, 2, 3 நாட்களுக்குள்ளாக மின்சாரம் அவர்களுக்குக் கிடைக்கச் செய்து பாதிப்பை போக்கக்கூடிய நடவடிக்கையை அரசு எடுக்குமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திடீரென்று ஒரு பிரச்சினையை எழுப்பினால் எப்படி அரசுத் தரப்பிலே பதில் சொல்ல முடியும்? இதற்குத்தான் முதலிலேயே அதைப்பற்றி எழுதிக்கொடுக்கவேண்டுமென்றுச் சொல்கிறோம். (குறுக்கீடு) நிவாரணம் முக்கியமானதுதான். நான் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிடவில்லை. 20ஆம் தேதி அதைப்பற்றி விவாதம் வருகிறது. அப்போது முழு விவரமும் கேட்கலாம், அரசு தரப்பிலும் பதில் சொல்ல வாய்ப்பு உள்ளது.

திரு. ஜே. எஸ். இராசு : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் ஏற்பட்டுள்ள வெள்ள விபத்தின் காரணமாக நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இங்கே அறிக்கையை வைத்தார்கள். தென் மாவட்டங்களிலே ஏற்பட்டதைப்பற்றிய குறிப்புகள் தான் அதிலே இருக்கின்றன. திருச்சி மாவட்டத்திலே ஏற்பட்ட வெள்ள விபத்தால் பெரம்பலூரில் காமாட்சி அம்மாள் என்ப

வரும், சுப்பிரமணியம், மகேசுவரி ஆகிய குழந்தைகளும் அடித்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள். ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் மண்ணடித்துப் போய் இருக்கின்றன. அதைப்பற்றிய குறிப்பு அறிக்கையிலே இல்லை, எந்தத் தகவலும் இங்கே தெரிவிக்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 20 ஆம் தேதி அதுபற்றி விவாதம் நடைபெற இருக்கிறது. அன்றைய தினம் திரு இராசு இது குறித்து வேண்டுமானால் பேசலாம்.

(ஆ) தமிழகத்திற்கு மத்திய இருப்பில் இருந்து கிடைக்கும் அரிசி உதவி.

திரு என். வரதராஜன் : தலைவர் அவர்களே, முக்கிய மான ஒரு பிரச்சினையை நான் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். காலம் தாழ்ந்த பெய்த மழையின் காரணமாக தமிழ்நாட்டிலே உள்ள மக்கள் விவசாயிகளும் மற்றவர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டு தவித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் அறுவடைக்கு தயாரான நெல் மணிகள் அழிந்துக் கொண்டிருக்கின்றன. அந்த அழிவின் காரணமாக ஏற்கெனவே வேதனைப்பட்டுக் கொண்டிருக்கின்ற மக்களை மேலும் வேதனை குள்ளாக்குகின்ற வகையிலே இன்றைக்கு அகில இந்திய வானொலி யிலே ஒருசெய்தி காலையிலே வருகிறது, அந்தச் செய்தியைக் கேட்டவுடனே நான் அதிர்ச்சியடைந்தேன், இந்தச் சபையே அதிர்ச்சியடையக்கூடியச் செய்தி. ஏற்கெனவே நமக்கு மாதம் ஒன்றுக்கு இலட்சம் டன் அரிசி கொடுக்கவேண்டுமென்று நாம் கேட்டுக்கொண்டே இருக்கிறோம். ஆனால், 40 ஆயிரம் டன்கள் கொடுக்கிறோம் என்று அவர்கள் சொல்கிறார்கள். காலையிலே சொன்ன செய்தியிலே இந்த மாதம் 35 ஆயிரம் டன்னும், அடுத்த மாதம் 25 ஆயிரம் டன்னும் கொடுப்போம் என்று அதிகாரப்பூர்வமாக ரேடியோவிலே அறிவித்தார்கள். தமிழ் நாட்டில் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கின்ற மக்களை மேலும் வேதனையில் ஆழ்த்துகின்ற முறையிலே அவர்கள் மேல் பாய்ச் சலை செய்வதைப்போல் மத்திய அரசு செய்து கொண்டிருக் கிறது. இதற்கு மாநில அரசு எடுத்துக் கொள்கின்ற நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரிசியைக் குறைத்திருக் கிறார்கள். திரும்பவும் இவர்கள் எழுதுவார்கள் (குறுக்கீடு) அந்தக் கஷ்டம் தெரிகிறது. ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுங் கள். நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம்.